LIBRARY
16 DEC 1969
STATE LEGISLATURE, MADRAS

தமிழக சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1968 ஆகஸ்ட் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

I. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: 155, 156, 157, 158 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Silk filatures.

*159 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether this Government is receiving any Central Government subsidies to cover the continued loss in the working of silk filatures; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) and (இ) தமிழகத்தில் பட்டு இழை சுற்றும் தொழிற்சாலை எதுவும் இல்லை. எனவே இவ்வினா எழவில்லை.

THIRU K. VINAYAKAM: Is it a fact that we are continuously incurring loss in running these silk filature industries?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட தொழிற்சாலையே தமிழகத்தில் இல்லை.

Functional Industrial Estate at Adyar

*160 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Government propose to set up a Functional Industrial Estate for Instrument Industry at Adyar, Madras and

(b) if so, the cost of the scheme?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம், ஐயா.

(இ) இந்தத் திட்டத்தின் மதிப்பீடு மூலதனச் செலவு ரூ. 15·06 இலட்சமும் நடைமுறைச் செலவு ரூ. 1·847 இலட்சமும் ஆகும்.

THIRU K. VINAYAKAM: Is the State Government getting any aid from the Centre in running this institution, Sir?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தத் தொழிற்பேட்டை நடத்துவதில் இந்திய சர்க்காருடைய உதவி எதுவும் இல்லை. மாநில சர்க்கார்தான் நடத்துகிறது. வணிகம் செய்வதற்

கான கருவிகள், இன்றியமையாத் தேவையாகவுள்ள ஸொஃபிஸ் டிகேடெட் இன்ஸ்ட்ரூமெண்ட்ஸ் என்ற வகையில் உள்ளவை பற்றுக்குறையாக இருப்பதால், அவற்றை உற்பத்தி செய்வதற்காக இந்தத் தொழிற்பேட்டை நிறுவப்படுகிறது.

Students and language

* 161 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Hon. Minister for Public Works has advised the student community to leave the language issue to the Government?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

THIRU K. VINAYAKAM: What was the necessity for the agitation launched by the students regarding this language issue and how does this Government propose to solve this tangle? Does the Government expect the students to agitate again if they are not satisfied with the stand taken by the Government?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நாட்டினுடைய மொழிப் பிரச்சினைக்கும் மாணவர்களுக்கும் தொடர்பு இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால், அவர்கள் எதிர்காலக் குடிமக்களாகின்ற காரணத்தினாலே அந்தப் பிரச்சினையில் அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். மொழிப் பிரச்சினை என்னும்போது, பயிற்சி மொழி பிரச்சினை ஒன்றாக இருக்கிறது; ஆட்சி மொழிப் பிரச்சினை வேறொன்றாக இருக்கிறது. ஆட்சி மொழிப் பிரச்சினையைப் பொறுத்து கருத்துக்களைக் கூறும் அளவுக்கு மாணவர்கள் உணர்ச்சி வயப்பட வேண்டாம், பெரியவர்கள்—எல்டர்ஸ்—பார்த்துக்கொள்ளுவார்கள். அரசாங்கம் இதற்கு பொறுப் பேற்றுக் கொள்ளும், ஆகவே மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்கள். கூடுமானவரை மாணவர்கள் தங்களுடைய படிப்பைப் பொறுத்த வரையிலும் இருக்கும் கருத்துக்களை மட்டும் எடுத்துச் சொல்லி, ஆட்சி மொழிப் பிரச்சினை போன்ற மற்றவைகளையெல்லாம், பல்வேறு அரசியல் கட்சிகள்—ஆளும் கட்சி, எதிர்கட்சிகள் ஆராய்ந்து தக்க முடிவு செய்வார்கள், அவர்களிடத்திலே இந்தப் பிரச்சினையை விட்டுவிட வேண்டும், எந்த வகையிலும் மாணவர்களுடைய படிப்பு பாழாகக் கூடாது என்பது அந்தக் கருத்தினுடைய முக்கிய நோக்கமாகும்.

DR. H. V. HANDE: Are the Government aware that the students are disappointed because English is being taken away from them by the introduction of the Tamil medium? Are the Government also aware that there is a feeling among students that all the thnigs for which they fought are now completely set at nought because of the present policy of the Government and they are very bitter about it? If so, may I know what steps the Government are taking to see that the students are satisfied and to establish a good standard of English and even if necessary by introducing the English medium in all the Collges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முன்பே இதுபற்றி நான் விடை இறுத்திருக்கிறேன். ஆகவே, பயிற்சிமொழி தமிழாக இருக்க வேண்டும் என்கிற கோரிக்கை, மாணவர்கள் கிளர்ச்சி செய்தபோது வைத்த கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது. இப்போது கூட, கலைக் கல்லூரியில் ஆங்கிலம்